# குழந்தை இயேசுவின் மன்றாட்டு மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும். ஆண்டவரே இரக்கமாயிரும்

கிறிஸ்துவே இரக்கமாயிரும். கிறிஸ்துவே இரக்கமாயிரும்

ஆண்டவரே இரக்கமாயிரும். ஆண்டவரே இரக்கமாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கனிவாகக் கேட்டருளும்

வானகத் தந்தையாகிய இறைவா. எங்கள் மேல் இரக்கமாயிரும்

உலகை மீட்ட மகனாகிய இறைவா. எங்கள் மேல் இரக்கமாயிரும்

தூய ஆவியாகிய இறைவா. எங்கள் மேல் இரக்கமாயிரும்

அற்புத குழந்தையாகிய இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

வியத்தகு முறையில் செயல்படும் ஒப்பற்ற வல்லமையுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

எங்கள் எண்ணத்தையும் உள்ளத்தையும் ஆய்ந்தறியும் ஞானமுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

எங்களுக்கு உதவிட என்றும் விரைந்து வரும் நன்மனமுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

வாழ்க்கையின் முடிவுக்கும் கடைசி கதிக்கும் உமது பராமரிப்பால் எங்களை நடத்திச் செல்லும் குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

உமது உண்மையின் ஒளியால் எங்கள் இதயத்தின் இருளை ஒட்டும் குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

எங்கள் வறுமையை ஒழிக்கும் கொடை வள்ளலாகிய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

துன்புறுவோரைத் தேற்றும் நட்புறவுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

உமது இரக்கத்தால் எங்கள் பாவங்களை மன்னிக்கும் குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

எங்களைத் திடப்படுத்தும் வல்லமையுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

தீமைகளை எல்லாம் அகற்றும் ஆற்றலுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

உமது நீதியால் பாவத்திலிருந்து எங்களைத் தடுத்தாட்கொள்ளும் குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

நரகத்தை. வெல்லும் திறமையுள்ள குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

எங்கள் இதயங்களைக் கவரும் எழில் வதனமுள்ள குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

உம் கையில் உலகத்தை ஏந்தும் பேராற்றலுடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

ஆர்வமற்ற எங்கள் உள்ளங்களை உமது அன்புத் தீயால் பற்றி எரியச் செய்யும் குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

எல்லா நன்மைகளாலும் எங்களை நிரப்பும் ஆசீரை அளிக்கின்ற அற்புத கரமுள்ள குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

பக்தர்களின் உள்ளங்களை மகிழச் செய்யும் இனிய புனித பெயருடைய குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

உலகை எல்லாம் நிரப்பும் மாட்சிமையுள்ள குழந்தை இயேசுவே. எங்கள் மேல் இரக்கமாயிரும்

கருணை கூர்ந்து. எங்களைப் பொறுத்தருளும் இயேசுவே

கருணை கூர்ந்து. எங்கள் மன்றாட்டைக் கனிவாய் கேட்டருளும் இயேசுவே

எல்லாத் தீமையிலுமிருந்து. எங்களை மீட்டருளும் இயேசுவே

எல்லாப் பாவத்திலுமிருந்து. எங்களை மீட்டருளும் இயேசுவே

அளவற்ற உம் நன்மைக்கு எதிராக எழும் எல்லா அவநம்பிக்கையிலுமிருந்து. எங்களை மீட்டருளும் இயேசுவே

அற்புதம் புரியும் உமது ஆற்றலுக்கு எதிராக எழும் எல்லாச் சந்தேகத்திலுமிருந்து. எங்களை மீட்டருளும் இயேசுவே

உமது வழிபாட்டில் ஏற்படும் எல்லாக் குறைபாட்டிலுமிருந்து. எங்களை மீட்டருளும் இயேசுவே

எல்லாத் தீமையிலும் கேட்டிலுமிருந்து. எங்களை மீட்டருளும் இயேசுவே

உமது கன்னித் தாய் தூயமரியாள், வளர்ப்பு தந்தை தூய சூசையப்பர் இவர்களின் பரிந்துரை வழியாக. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

எங்களை நீர் மன்னிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம். எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

உமது திருக்குழந்தைப் பருவத்தின்பால் எங்களுக்குள்ள அன்பையும் பக்தியையும் காத்து வளர்த்திட வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம். எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

அற்புத உம் திருக்கரம் எங்களை விட்டு விலகாதிருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

எண்ணற்ற உமது நன்மைகளை நாங்கள் என்றும் மறக்காதிருக்க வேண்டுமென்று. உம்மை மன்றாடுகிறோம்

உமது திரு இருதய அன்பால் எங்கள் உள்ளங்களை மென்மேலும் பற்றி எரியச் செய்ய வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

நம்பிக்கையோடு உம்மைமக் கூவியழைப்போரின் குரலுக்குக் கனிவாய்ச் செவிமடுக்க வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

எங்கள் நாடு அமைதியிலே நிலைத்திருக்க அருள்தர வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

எல்லாத் தீமையிலிருந்தும் எங்களை விடுவித்தருள வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

உமது பக்தியிலே நிலைத்திருக்கும் அனைவருக்கும் நித்திய வாழ்வை அளித்தருள வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

பொதுத்தீர்வை நாளிலே இரக்கத்துடன் எங்களுக்குத் தீர்ப்பிட வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

உமது அற்புத திருஉருவிலே எங்கள் ஆறுதலாக, அடைக்கலமாக நீர் இருக்க வேண்டும் என்று. உம்மை மன்றாடுகிறோம்

இறைமகனே, மரிமகனே, இயேசுவே. உம்மை மன்றாடுகிறோம்

உலகின் பாவங்களைப் போக்கும். சர்வேசுரனுடைய செம்மறியே.
எங்களைப் பொறுத்தருளும் இயேசுவே

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் இயேசுவே

உலகின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறியே. எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

*செபிப்போமாக:*

அற்புத குழந்தை இயேசுவே! அமைதியற்ற எங்கள் உள்ளங்களின் மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து, பணிந்து, வணங்கி வேண்டுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம் கனிவோடு எங்கள் செபத்தை ஏற்று, உருக்கமாக நாங்கள் வேண்டும் இந்த வரத்தை

*(வேண்டியவரத்தை இங்கே குறிப்பிடுக)*

அளித்தருளுமாறு உம்மை இறைஞ்சுகிறோம். எங்களை வாட்டி வதைதக்கும் துன்பத் துயரங்களையும் வேதனைச் சோதனைகளையும் நீக்கி, உமது குழந்தை திருப்பருவத்தின் பெயரால் எங்கள் மன்றாட்டை ஏற்றருளும், அதனால் உமது ஆறுதலையும், ஆதரவையும் பெற்று. தந்தையோடும், தூய ஆவியோடும் உம்மை என்றென்றும் நாங்கள் வாழ்த்திப் போற்றுவோமாக ஆமென்.